# Sub Court, Eraniel

A.S. No.16/2022
Date: 30.11.2023
பி.வா.சா.1 - திரு. சக்திதரன்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் என்னுடைய முன் பாத்தியஸ்தருக்கு டி பட்டிகையில் 4 வது இனச் சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை ஆணையர் சொத்தை பார்வையிடும் போது அவரிடம் கொடுத்தேன். அதை வைத்து அவர் சொத்தை அளவீடு செய்தார். அவ்வாறு பி.வா.சா.ஆ.6 ஆவணத்தை வைத்து அளந்ததாக ஆணையர் அவருடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். சொத்திற்கான நான்கு பக்க அளவீடுகளோ வரைபடமோ பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அளவு சொல்லப்பட்டுள்ளது. ஆனால் வரைபடம் இணைக்கப்படவில்லை. அவ்வாறு அளவு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ல் செல்லம்மாள் கணவர் மாதேவன் பிள்ளையின் சொத்து என்னுடைய சொத்திற்கு தெற்கு எல்லையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆவணங்களில் என்னுடையச் சொத்திற்கு தெற்கு எல்லையாக மாதேவன் பிள்ளையின் சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கிய பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கோலப்பா பிள்ளை சொத்திற்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தங்கம்மாள் என்பவரின் கணவர் பெயர் தான் கோலப்பா பிள்ளை. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் எதிலும் நான்கு பக்க அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.